**செய்தி வெளியீடு எண்: 206** **நாள்: 03.02.2022**

**செய்தி வெளியீடு**

சென்னை மாவட்ட பள்ளிக் கல்வித் துறை சார்பில் இன்று (03.02.2022) அண்ணாசாலை, தேவநேய பாவாணர் நூலகத்தில், அரசுப் பள்ளியில் பயின்று, மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ள மாணவ / மாணவியர்களுக்கு ஆதவா அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்ற கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில், தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் **திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப.** அவர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்று, மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ள 20 மாணவ / மாணவியர்களுக்கு தலா ரூ.25,000/-க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் **முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,** இல்லம் தேடிக் கல்வி சிறப்பு அலுவலர் மற்றும் பொது நூலக இயக்குநர் **திரு.கே.இளம்பகவத், இ.ஆ.ப.,** சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.சா.மார்ஸ், ஆதவா அறக்கட்டளையின் தலைவர் திரு.பாலகுமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கல்வி உதவித் தொகையானது மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ள சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 20 மாணவ / மாணவியர்களுக்கும் 5 வருட மருத்துவப் படிப்பிற்கு ஆண்டுதோறும் தலா ரூ.25,000/-ம் தொடர்ந்து தங்களது அறக்கட்டளை மூலம் வழங்கப்படும் என ஆதவா அறக்கட்டளையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

.